# மெல்லிய அசைவுகள்

தொகுப்பு: அம்னா இர்ஷாட்



வெளியீடு: ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு

# மெல்லிய அசைவுகள்

நூலாசிரியர் : அம்னா இர்ஷாட்
மின்னஞ்சல் : amnairshad056@gmail.com
முதற் பதிப்பு– 2021
பக்கவடிவமைப்பு–ஜே.எம்.பாஸித்
புகைப்படம் அனைத்தும் : அம்னா இர்ஷாட்
பக்கங்கள் : 26
விலை : இலவசம்
வெளியீடு: ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு

Melliya Asaivukal (Collection of poems)
Author :- Amna Irzath
E-mail: amnairshad056@gmail.com
First Edition – 2021
Book Designed by –J.M.Basith
Photography - Amna Irzath
Published by – Sky Tamil Media Network

Download this book
www.skymediasl.com

வெளியீடு:

ISBN – 978-624-98274-0-0

All rights reserved. no part of this publication may be reproduced, stored in retrieval system, or transmitted in any form of by any means - electronic, mechanical, photocopying, recording or otherwise - without the prior permission of the author.

# சமர்ப்பணம்

என்னை ஈன்றெடுத்து உதிரத்தை பாலாக்கி என்னை ஆளாக்கி நல்லொழுக்கத்துடன் வளர்த்தது மட்டுமன்றி என் திறமைகளை வெளிக்கொண்டு வர இன்று வரை அயராது முயற்சி செய்து கொண்டிருக்கும் என் இரு கண்களான என் தாயிற்கு இப் புத்தகம்...



# அணிந்துரை

எல்லாப்புகழும் படைத்த ஒருவனுக்கே

உண்மையிலே கவிதை எழுதுவது என்பது உணர்வுகளின் வெளிப்பாடே சிந்தனைகளையும் மொழி ஆற்றலையும் திறம்பட வளர்த்துக்கொள்ள முடியும். கவிதைகளை வாசித்து கருத்துக்களை உணர்வுபூர்வமாக புரிந்து கொள்வதற்கு யாரும் பின்னிற்க மாட்டார்கள். அந்தவகையில் எமது பாடசாலை மாணவி அம்னா இர்ஷாத் எழுதிய மெல்லிய அசைவுகள் கவிதை தொகுப்பு நூல் பல கருத்துக்களை மிகத் தத்ரூபமான முறையில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. மிகவும் உற்சாகத்துடனும் தன்னம்பிக்கையுடனும் எழுதப்பட்டுள்ளதை காணமுடிகிறது.

இக்காலத்தில் மாணவர்களும் இளைஞர்களும் தங்களது நேரங்களையும் ஆற்றல்களையும் கருத்திற் கொள்ளாமல் வீண்விரயமாக்கிக் கொண்டிருக்கையில் இம்மாணவியினது முயற்சியானது பல பேரிற்கு முன் உதாரணமாக அமைகிறது. மேலும் எதிர்காலத்திலும் இவ்வாறான பல நூல்களை வெளியிட வேண்டும் என வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்

இவ்வண்ணம்



**எம்.எச்.எம் நுஹ்மான்**
**அல்-ஹிக்மா முஸ்லிம் மஹா வித்தியாலயம்**
**ஆண்டியாகடவத்தை**

# என்னுரை

இன்றைய இலட்சியம் நாளைய சாதனை….!

இப்புத்தகத்தில் வரும் அனைத்து புகைப்படங்களும் தன்னால் எடுக்கப்பட்ட புகைப்படங்களே ஆகும். என் கண் முன்னே தோன்றும் ஆழகிய காட்சிகள் எல்லாம் கவிதையாக மாறுகிறது அவை என் கண்ணைவிட்டு அழிந்தாலும் என் வரிகளைவிட்டு என்றும் அழியாது. என் வரிகளை நான் வாயால் கூறினால் அவ்வார்த்தைகள் காற்றோடு காற்றாய் பறந்து போகலாம் ஏன் மறந்தே போகலாம் எழுதும் எழுத்து என்பது என்றும் அழியாது நிலைத்து நிற்கும். அதனால் தான் எனது இரசனையால் தன்னை தானே தொலைத்து உணர்ச்சியால் உருவெடுத்த கவிகளை எழுத்து மூலம் மெல்லிய அசைவுகள் எனும் இப் புத்தகத்தில் பொழிந்துள்ளேன்.

இப்புத்தகம் தூங்கிக் கிடக்கும் இமைகளை இரசனையாலும் உணர்சிகளாலும் தட்டி எழுப்பும் என நினைக்கிறேன். ஏதேனும் பிழைகள் இருப்பின் சுட்டிகாட்டுங்கள் மன நிறைவோடு ஏற்றுக்கொள்கின்றேன்



அம்னா இர்ஷாட்
நூலாசிரியை

E-mail: amnairshad056@gmail.com

# பொருளடக்கம்


01. சமாதானம்

02. முதுமையின் வண்ணம்

03. தொழிலாளர்கள்

04. நூற்றாண்டின் நீளமாகிய பெருங் கனவு நான்

05. பறவைகளின் வானம்

06. குணம் மாற்றும் மனித குலம்

07. பெண்ணும் ஒரு தியாகியே

08. ஆண்மகனே உனக்கொரு வேண்டுகோள்

09. இன்னிசை

10. மாலை நேரத்து மயக்கம்

11. புறா

12. ஒரு துளி நீர்

13. குடிசை வீடு

14. அப்பாவுக்கு ஒரு கடிதம்

15. துணிந்தெழு

16. கல்வி

17. காரிருள்

18. ஒற்றுமை

19. நான் நடக்கும் பாதையில் நிழலாய் என் அம்மா

20. இமைக்கா நொடிகள்

01



# சமாதானம்

கலங்கிய கண்களை
மறைமுகமாக
துடைத்துக் கொண்டும்
போலி சிரிப்பை
வெளிக்காட்ட
முடிகிறதே சில
தருணங்களில்......

ஆழமாய்
அழுகையை
அடி மனதிலே
அடக்கி வைத்து
வார்த்தைகளை
வெளிவர இடம்
கொடுக்காமல்
வேலி அடித்து காத்து
விடைபெறும் போது
சட்டென சிந்தும்
சில கண்ணீர்
துளிகள்......

அனைத்துமே சிறு விலகலாக
சமாதானம்.....

துப்பாக்கிகளை
காட்டியும்
குண்டு வெடிப்புகளாலும்
எம்மை கதி கலங்க
வைத்து
ஊரடங்கு சட்டம் எனும்
பெயரில் நம்மை வீட்டில்
அடைத்து வைத்து
உனது சில்லறை
அவாவுக்காக நம்
உயிர்களோடு
விளையாடி
அடிமையாக்கினாயே!- ஆனால்
உனக்கு வருகையில்
மட்டும் எப்படி துடிக்கிறது
உன் மனம்
பார்த்தாயா....

சாக்கடையில்
கிடக்கும் உன் கோபத்தை
அடியோடு அள்ளி வீசு
உரோடு சேர்ந்தெழு
சமாதானமாய்.....

02

# முதுமையின் வண்ணம்





கல்லு முல்லு
பாதையிலே
கல்லென தேய்ந்த
மேனியாடும்
சுட்டெரிக்கும் வெயிலில்
வாடிப்போன முகத்தோடும்
பசிக்கொடுமையில்
எரியும் வயிற்றோடும்
இங்கு எத்தனையோ
சிரிப்பு நிறைந்த
முத்தான முகங்கள்........

சாலையோர
சாபங்களாய்
அங்கும் இங்கும் என
ஊஞ்சலாடுகிறது
முதுமை நெஞ்சங்கள்........

கண்டுக்காமலே ஓடுகிறது
மனித மனம்

உடலும்
சதையும் சுருங்கி
கண்களும் கானல்
நீராய் மாறி
செவிப்புலன்களை
இழந்தும்
நடை பயணம் போடுகிறாள்
தேவதை.....



03

# தொழிலாளர்கள்

கடின உழைப்பை வைத்து
வெற்றியை செதுக்கி
வீடு திரும்பும் இவர்கள்
தொழிலாளர்கள் அல்ல
வெற்றியாளர்களே.....

சிற்பிக்குள்
பூக்கும் முத்துக்களை
உன் முகத்தில் கண்டு
அசந்து போகிறேன்
நான்...

ஒத்த ஆயுதத்தோடு
ஒத்தயாளா நீ நின்று
மொத்த உழைப்பாலே
தெம்பாக நிற்க வைக்கிறாய்
வம்சத்தையே.....

செருப்பின்றி - நீ
எடுத்து வைக்கும்
கால்களின்
வலிமையை - அந்த
இரும்பிடமும்
காணவில்லை
நான்......

தினம் தினம்
ஓய்வின்றி ஓடும்
இயந்திரமாய் நீ
இருந்தாலும்
உறங்குகிறாய்
எதுவும்
அறியா பாலகனாய்....

04



# நூற்றாண்டின் நீளமாகிய பெருங் கனவு நான்

எனது மெய்யான
வாழ்வில் பொய்யாகி
உடைத்து எறியப்பட்ட
ஆசைகளின் பிரதிபிம்பமே
என் கனவு.....

என்
வாழ்கை பயணத்திற்கு
நான் எடுக்கும்
முதல் டிக்கட்
என் கனவு.....

ஊர் பிச்சைக்காரரை கூட
நாட்டு மன்னனாய்
நிறுத்தி அழகு பார்க்கிறது
என் கனவு.....

என் எதிர்கால
எண்ணங்களுக்கு
வண்ணம் தீட்டி
உலகிற்கே அறிமுகப்படுத்துகிறது
என்
கனவு......

சந்தோஷம் நிறைந்த
ஆசை முகத்துடன்
அனைத்தும் கனவு என்று
அறிந்தும் புன்னகைத்துக் கொண்டு
இருக்கிறேன் நூற்றாண்டின்
நீளமாகிய பெருங்கனவாக
நான்....

# 05 பறவைகளின் வானம்



வானம் எனும் நீலப்
போர்வையில்
சிறகடித்து பறக்கும்
அதிசய பிறவியாய்
உன்னைக் கண்டேன்.....

ஆடியில காற்றடித்தால்
அதில் வட்டமடித்து
பறக்கும் பட்டங்களை
போல் உன்னை
கண்டேன்....

வீட்டிற்காக உழைக்கும்
தொழிலாளர்களாய்
குஞ்சுகளுக்காக
இரை தேடி அலையும்
உன்னுள் தொழில்
உணர்வைக் கண்டேன்.....

மாலை நேரத்திலே
கதை பேசி
கவி பாடி
ஒன்றாக பறந்து
வரும் ஒற்றுமையை
உன்னுள்ளே கண்டேன் ......

சித்தால் வேலை போல்
சில சின்னஞ்சிறு
மாளிகைகளை கட்டினாய்
அதில் ஒரு மனிதநேயத்தை
உன்னுள் கண்டேன்.....

சிறகு இருக்கும் பறவை - நீ
மனித பார்வை ஓர் தடையல்ல
பாரில் நீயும் ஓர் தேடல் தான்
நிச்சயமாக
மறந்து விடாதே
பறந்து விடு...




06

# குணம் மாற்றும் மனித குலம்

சுயநலத்துக்காகவும்
ஆதாயத்திற்காகவும்
தன் குணத்தையே
மாற்றிக் கொள்ளும்
மனிதா
உன்னிடம் அந்த
பச்சோந்தியே
தோற்று போகிறதடா.....

பச்சோந்தி தனது நிறத்தை
மட்டுமே மாற்றுமே தவிர
குணத்தை அல்ல
மனிதா.....

சந்தர்ப்பம் கண்டு
குணத்தை மாற்றும்
உன்னை
அந்த பச்சோந்திக்கு
ஒப்பிடுவது தகுமா ?

07




# பெண்ணும் ஒரு தியாகியே

தான் வாழ்ந்த
சொர்க்கத்தை உடைத்து
இரத்த உறவுகளை பிரிந்து
புதிய வீட்டிற்குள்
கால் பதித்து
புதிய உறவுகளோடு
அறிமுகமாகி புரிந்து
நடக்கும் பெண்ணும்
ஒரு தியாகியே....

கழுத்திலே ஒரு கயிற்றையும்
வயிற்றிலே ஒரு வாரிசையும்
கொடுப்பது தான் பெண்ணின்
வாழ்வென்றால் திறமைகள்
எங்கே போவது ....

அவள் குடும்ப
குத்துவிளக்காய் ஆழப்பட்டாலும்
திறமை,லட்சியம்
என்பவற்றால் நிறப்பப்பட்டவள்
தானே....

ஆண்மகனே
உன் வெற்றிக்குப் பின்னால்
ஒரு பெண் இருப்பாள்
நிச்சயமாய்
ஆதலால் அவளும்
ஒரு தியாகியே....

08



# ஆண்மகனே உனக்கொரு வேண்டுகோள்

மதுவிலே மூழ்கி
மனிதநேயத்தையும்
குலைத்து அன்பு வாழும்
நெஞ்சை நஞ்சாய்
கொண்டு உணர்வுகளை
இழந்து வாழும்
நீ பிணத்துக்கு
சமனே மனிதா...

மண்ணின் மேல்
வாழவிடாமல்
மண்ணுக்குள்ளே அழைத்துச்
செல்லும் மதுவை நீ தொடுகையில்
நொடிப் பொழுதில்
நீ கட்டிய மாதுவின்
தாலியை நினை....

நாளை விடிவில்
மதுவில்லா மாநிலத்தை
உருவாக்க ஆண்மகனே
உனக்கொரு வேண்டுகோள்....

09



காதில் இசை
கேட்கும் கனமே
உயிரின் மொழியை
உணர்கிறேன்

இசையிலே
உருகாத இதயம்
உண்டோ ....

இறைவனும்
இன்பமாய்
உருகிடுவான்.

சிறு குழந்தை முதல்
முதியோர் வரை
பின்னிப்பிணைந்து
பயணிக்கிறது
இசை....



10



# மாலை நேரத்து மயக்கம்

பூமியில் ஒளியெறிந்து
விளையாடும் மழலை நீ!
கண்களை மங்கலாய்
தொட்டுச்செல்லும்
மந்திர வெளிச்சம் நீ!

பச்சை மரங்களின்
உடலிலும்
பருவப்பெண்களின்
மனதிலும்
இடம் பிடித்த
காதல் உணர்வு நீ!

உனது சிநேகிதனாகிய
மேகம்
கலைந்து சென்றதும்
நீயும் சோகத்தில் கருகத்
தொடங்குகிறாய்....

கொட்டிக்கொண்டே
இருக்கிறாய்
உன் அழகை.
உன் அழகில் மீண்டுச்
செல்கிறேன் நான்
ஜன்னலோர
பார்வையாய்..........

11




# புறா

உலகம் முழுவதும்
தூது சென்ற
தபாற்காரனே
உனக்கு
நவீன உலகம்
பிரியாவிடை
கொடுத்து விட்டது
இன்று....

வெள்ளை,கருப்பு
என கண்டாங்கி
சேலையை
கட்டி வந்த
வானுலக
இளவரசியே....
வான் அழகின்
புன்னகை அல்லவா
நீ....

சமாதானத்தை
உன்னைக் கொண்டு
காட்டும்
உயிரோவியமே...

கோயிலை இதயம்
என
சுற்றி வரும் உனக்கு
என் இதயத்தில்
ஓர் இடம்
கொடுத்து விட்டேன்
நான்...

12

# ஒரு துளி நீர்



முகிலின்றி
தாயின் மார்பில்
பாலின்றி
கண்களில் நீர் இன்றி
சூரியன் வெப்பத்தை
கைப்பிடித்து
மேகங்களை சந்தித்து
விரைவாய் நீ
மண்ணைத் தொட
தாகத்தோடு நாங்கள்
சோக நிலையில்......

வேரோடு விளையாடும்
வீரன் நீ!
தாகத்திற்கு பாலூட்டிய
தாய் நீ!
பசுமையின்
விசாலம் நீ!
பார் குளிரும்
மழை நீ!
நீரின்றி அமையாது
உலகு உயிர் நீரை
சேமித்திடு இன்று!

13



# குடிசை வீடு

ஓலைக் குடிசை
வீட்டிலே
ஓட்டைகள் நிறைந்த
கூரையிலே
இன்றும் மழை
பொழிய
ஒவ்வொரு மழைத்
துளியும்
ஓராயிரம் கவி பாடுதடா....

ஊதியே நெருப்புக்கு
உயிர் கொடுத்து சமைத்துத்
தரும் வடிக்கா கஞ்சி கூட
வாயில இன்னும்
சுவைக்குதம்மா...

எல்லோருக்கும்
ஒரே வானம்
ஆனால் என் ஓலை
மாளிகையில் மட்டும்
லட்சக் கணக்கான
வானங்கள்....

இரவிலே தலைசாயும்
கனம்  என்னைப் பார்த்து
வான் தேவதைகளின்
புன்னகை...

ஆனால் வறுமையிலும்
மகிழ்ச்சிக்கு குறைவே இல்லை

பட்டினியிலே உறங்கினாலும்
பக்குவமாய் உறங்குவோம்
குடிசை வீட்டிலே உறங்கும்
சுகம் மாளிகை வீட்டில்
தோற்றே போகுமடா...

14




# அப்பாவுக்கு ஒரு கடிதம்

அன்புள்ள அப்பா
நொடிப்பொழுதில்
ஆசைகளை
பூர்த்தி செய்வாய்
மறு பிறவிக்கே
இடமளிக்காமல்....

என் கண்ணிலே துளி
நீரும் வந்ததே இல்லை,
கனவிலும் சிறு
கஷ்டத்தை கூட
கண்டதில்லை உன்னால்.

பல முறை நீ என்னை திட்டினாலும்
வலி உனக்குதான் அப்பா !..

என் ஆசையை தன் ஆசையாய்
கொண்டாயே
இல்லை என்ற
வார்த்தைக்கு
உன் அகராதியில்
இடம் கொடுக்காமல்...

நமக்காக தினம் தினம்
வியர்வை தியாகம்
செய்யும் நீ...

தொழிலாளியாக
இருக்கலாம்
நேர்மையிலும் பாசத்திலும்
நீ ஒரு முதலாளியே
அப்பா !

தைரியத்தின் முழு
வடிவம் நீ !
கவலைகள் கோடி
இருந்தாலும்
தண்ணீர் வராமல்
வேலி அடிக்கும்
கண்களுக்கு சொந்தக்காரர்
நீயே அப்பா...

15

# துணிந்தெழு




மனிதா
துணிந்தெழு
நீ துணிந்தெழுந்தால்
இமயமலை கூட
ஒரு நொடியிலே
சிறு துளி ஆகி விடும்

பொறுமையாய் இரு
பொறுமையே உனது சின்னம்
ஆனால் தகர்த்து எறிய
வேண்டிய இடத்தில்
எதிர் நீச்சலடி...

துணிந்தெழு மனிதா
துணிந்தெழு
வையகமே உனது
தெருவில் கால்வைத்தால்
தெருச்சண்டை வருமோ
என்று நீ எண்ணி
வீட்டோடு கிடந்தால்
வில்லங்கம் உன்னை
வந்தடையும்

மனிதா
தான் தனி மனிதன்
என ஒரு பொழுதும்
எண்ணாதே
தனி ஒருவன் நான்
என்ன செய்வேன்
என தயங்கிக் கிடக்காதே
ஒரு பொழுதும்

எழு மனிதா
துணிந்தெழு...



16

# கல்வி

மண்ணில் பிறந்து
மனிதன் கற்க
விண்ணில் கால் பதித்து
வியப்பை பெற்றது.....

உலகம் முழுதும்
சுற்றி
உள்ளதை சொல்லித் தரும்
உயர்வான கல்வியே இது.....

மடமையை ஒழிக்கிறது
இயலாமையை வெல்கிறது
கஷ்டத்தை ஒழிக்கிறது

உலகத்தின் காட்சிகளை
அறிவிக்கும் முன்னோடி.....
உலகத்தையே காண்பதற்கு
அளிக்கின்ற கண்ணாடி இது.....

சிந்தனை வாயிலை
சிறப்பாய் திறந்து விட
விரைவுமிக்க திறவு கோள்
கல்வி..





17

# காரிருள்

ஏக்கங்களில் தடுமாறும்
நெஞ்சங்கள்...
சந்தேகங்கள் நிறைந்த
உறவுகள்...
கவலைகள் குவிந்த
வாழ்க்கை...
சஞ்சலங்களோடு உறவாடும்
உள்ளங்கள்...
போலி முகங்கள்...
அகத்தை மறைக்கும்
பகல்...
கோரமான கனவு நிறைந்த
இளைஞர்கள்...
இவ்வனைத்து
உணர்வுகளுக்கும்
ஆர அமர பேச வைத்து
தீர்ப்பளிக்கிறது காரிருள்.

பாரிலுள்ள அனைத்திற்கும்
பல பல வண்ணம் ஊற்றி
வேற்றுமைகளை நிரப்புகிறது ஒளி.

அனைத்து விம்பங்களையும்
உடைத்து மூலம் ஒன்றுதான் என்று
ஒற்றுமை பேசுகிறது
காரிருள்.

கனாக்களும்,
கற்பனைகளும்
ஒன்றாகி பிறந்து
உலகிற்கு அறிமுகமாகி
சிறகு முளைக்காமலே
பட்டாம் பூச்சியாகி திரிகிறது
காரிருள்...!

18




# ஒற்றுமை

இரவின் கதிரவனிடனும்
கதிரவனையே
கொள்ளைக்கொள்ளும்
இரவினிடமும்
சிறு துளிகளாய் விழுந்து
பெரு துளிகளாய் மாறும்
மழைகளிடமும்
கேட்டுத் தெரிந்து கொள்
ஒற்றுமையை...

சாதி, மதம் என
வெறிபிடித்து அலையாமல்
சகோதரனாய் பழகிப்பார்
சாத்தான் கூட்டத்திற்கே
ஒற்றுமையின் சத்தம்
ஓங்கி ஒலிக்கும்

மனிதா!
குழம்பாதே நீ!
குழம்பாதே
இங்கு வேற்றுமையிலும்
ஒற்றுமை காண்பதே
பெருமை

காரணமின்றி பிரிவுடனும்,
கலங்கிய கவலைகளுடனும்,
கண்ணீரில் வாழ்வோரை
நலன் காக்கும்
போதி மரமே
ஒற்றுமை...

இனம் அகற்றி
ஒய்வின்றி
இழி நிலையில் வாழ்வோரை
இணைத்து வைக்கும்
பேராயுதமே
ஒற்றுமை....

19



# நான் நடக்கும் பாதையில் நிழலாய் என் அம்மா

ஆயிரம் மருத்துவர்
இருந்தும் என் வலியை
உணர்விழக்கச்
செய்த முதல் மருத்துவர்
நீயே!...

நான் விழும்
போதெல்லாம்
வார்த்தையாலே
என்னைத் தூக்கி விட்ட
கரங்கள்
அம்மா நீ!...

உனது பிரகாசமான
முகத்தை
கண்டு அந்த நிலா
கூட ஒழிந்து
கொள்கிறதே

உனது
தன் நம்பிக்கையையும்,
தைரியத்தையும்
கண்டு, தெய்வமே
பொறாமை கொள்கிறான்

கருணையின்
மொத்த வடிவம்
அம்மா நீ!
உன் அன்பை
வர்ணிக்க என்
வார்த்தைகள்
போதாது அம்மா
என் உணர்வுகளால்
சொல்ல முடிந்த
கவிதை அம்மா நீ

20



# இமைக்கா நொடிகள்

தனிமையில் தானாக
சிரித்தேன்
பள்ளிப் பருவத்தில்,
தலையணையோடு
பேசுகிறேன்
கல்லூரி காலத்தில்.

சில காலங்களில்
நான் நீயாக மாறி
என்னை தேடினேன்.

இரண்டும் கெட்டகாலம்
என்று நினைத்து
பதிலளிக்காமல் இன்று
இமைக்கா நொடிகளில்
நானும் நீயும்.
ஆனால்
நீ கண்ணிமைக்கும்
ஒவ்வொரு
நொடியும் என் கண்கள்
இமைக்க மறுக்கிறது...



# நன்றியுரை

எனது இந்நூலை வெளியிடுவதற்கு பல வகையில் உதவிபுரிந்த அனைத்து நல்லுள்ளம் கொண்டவர்களுக்கும் எனது ஆழ்ந்த இதயத்தில் இருந்து நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி..!

குறிப்பாக இந்நூலை எழுதுவதற்கு ஊக்குவிப்பாகவும் உறுதுணையாக இருந்து நம்பிக்கை மற்றும் தைரியம் எனும் சிறகை எனக்குள் விதைத்த எனது தாயான பர்ஹானா அவர்களுக்கும் எனது திறமைகளுக்கும் மற்றும் இப்புத்தகத்தை வெளியிடுவதற்கும் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் முழு சுதந்திரத்தையும் அளித்த தந்தை இர்ஷாட் அவர்களுக்கும் முதலில் எனது நன்றிகள்...! மற்றும் இப்புத்தகத்தை எழுதுவதற்கு முக்கிய காரணமாய் அமைந்த எனது பாடசாலையான அல்-ஹிக்மா மு.ம.விற்கும் எனது பாடசாலையின் தூணான அதிபர் எம்.எச்.எம்.நுஹ்மான் அவர்களுக்கும் அதில் பல ஆலோசனைகளை வழங்கி திருத்தங்களையும் செய்துதந்த எனது வகுப்பாசிரியையான திருமதி நஸ்ரின் ஆசிரியை மற்றும் திருமதி முர்ஸிதா ஆசிரியை அவர்களுக்கும். என்னோடு இருந்து எனக்கு உதவியது மட்டுமன்றி தினம் தினம் ஊக்குவிப்பு அளித்துக் கொண்டிருந்த எனது சகோதரியான முபஸ்ஸிரா அவர்களுக்கும் மேலும் பலவகையான உதவிகளை அளித்த எனது நண்பர்களான எம்.ஆர்.அம்னா , எம்.ஆர் ஹஸ்னா, எம்.ஏ அஹ்மட், எம்.ஏ. அஸ்மா, ஆர்.ருஸ்னா, பஸ்னா, எம்.என்.நுஹா, எம். என். அஸ்ரா இவ் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றிகள்...! மற்றும் குறிப்பாக எனது இப்புத்தகத்தை கண்களை கவரும் வகையில் தூரிகைகோலமாய் அழகுற செய்து வடிவமைத்து இந்நூலை பதிக்க துணை நின்ற ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பணிப்பாளருமான ஜே.எம். பாஸித் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றிகள்..!

வெளியீடு:

ISBN – 978-624-98274-0-0

9 786249 827400

http://www.skymediasl.com